கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.
அ.வ.எண்.94/2016
நாள். 01.07.2026

2026ம் ஆண்டு ஜுலை மாதம் 01.07.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==================================================================

| | |
|---|---|
| பெயர் = திரு.ராஜேந்திரன் | தகப்பனார் பெயர்= திரு.மருதநாயகம் |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==================================================================

**PW2 மு.வி**

1) நான் இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் கண்ட ஆவணத்தை குறித்து எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 தான செட்டில்மென்ட் ஆவணம் குறித்து சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 தான செட்டில்மென்ட் ஆவணத்தை தயாரித்தது நான் தான்.

2) வா.சா.ஆ.1 தான செட்டில்மென்ட் ஆவணத்தை என்ன நோக்கத்திற்காக என்னை தயாரிக்க சொன்னார்கள் என்றால் தந்தை தனது மகனுக்கு செட்டில்மென்ட் ஏற்படுத்தி கொடுக்க. மேற்படி ஆவணம் வேறு எவரின் தூண்டுதலும் இல்லாமல் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் ஆவண எழுத்தர் என்ற முறையில் பொதுவாக தான செட்டில்மென்ட் ஆவணம் என்ன நோக்கத்திற்காக எழுதி கொடுப்பேன்

என்றால் எந்த பிரதிபலனும் இன்றி தனது உறவுகளுக்கு சொத்தை பாத்தியப்படுத்தி கொடுக்கும் நோக்கத்திற்காக எழுதப்படுவது.

3) வா.சா.ஆ.1 தான செட்டில்மென்ட் ஆவணத்தை என்னை தயாரிக்க சொன்னவர் யார் என்றால் காசி விஸ்வநாதன். வா.சா.ஆ.1 தான செட்டில்மென்ட் ஆவணத்தில் கண்ட சங்கதிகளை எனக்கு சொன்னது யார் என்றால் காசி விஸ்வநாதன். வா.சா.ஆ.1 தான செட்டில்மென்ட் ஆவணத்தில் கண்ட சங்கதிகளை காசி விஸ்வநாதன் படித்து பார்த்தாரா என்றால் படித்து பார்த்தார்.

4) வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணத்தை நான் தயாரித்த பிறகு காசி விஸ்வநாதன் என்ன செய்தார் என்றால் அதை படித்து பார்த்துவிட்டு சரியாக உள்ளதாக கூறி சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்வதாக கூறினார். வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணத்தில் காசி விஸ்வநாதன் யார் முன்னிலையில் கையொப்பம் செய்தார் என்றால் சாட்சிகள் முன்னிலையில். அதன் பின்பு என்ன செய்தார் என்றால் பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

5) வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணத்தில் பக்கம் 5ல் வரைவு தயார் செய்தவர் என்ற இடத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் L.M.ராஜேந்திரன் என்ற எனது பெயரும், எனது முகவரியும், எனது உரிமம் எண்ணும் கொண்ட சீல் வைக்கப்பட்டுள்ளது. அதில் உரிமம் எண் என்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் State:L.No.A/221/AYR/91.

(3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. )

(2ம் பிரதிவாதி தரப்பில் போதுமான வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.)

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.